1982 பிப்ரவரி 6]

செங்கற்பட்டு நகரின் வழியே செல்லும் தேசிய நெடுஞ்சாலை.

*வினா எண் 72— திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு நகரின் வழியே செல்லும் (G. S.T. Road) தேசிய நெடுஞ்சாலை மிகக் குறுகலாக இருப்பதால் விபத்துக்களைத் தடுக்கும் வகையில் மாற்று வழிப் பாதை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் செங்கல்பட்டு நகரைச் சுற்றி புறச் சாலை அமைக்கும் பணியை தேசிய நெடுஞ்சாலை வேலைகள் ஆறாவது திட்டத்தின்கீழ் ஒப்பளிக்க மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் இப்பணிக்குத் தேசிய நெடுஞ்சாலை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் (1980—85) மத்திய அரசின் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலை மிகக் குறுகலாக இருப்பதால் தினந்தோறும் அங்கே போக்குவரத்து நெரிசல் காரணமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன. இரவு நேரங்களில் அதிகமான லாரிப் போக்குவரத்து இருப்பதால் சில நேரங்களில் போக்குவரத்து ஸ்தம்பித்து விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை காரணமாக மீண்டும் வற்புறுத்தி, உடனடியாக மாற்றுப்பாதை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கும் இந்த நெடுஞ்சாலை மிகக் குறுகலான இடத்தில் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன். மாற்றுப்பாதை கண்டிப்பாகப் போட வேண்டும் என்பதற்குத்தான் மத்திய அரசுக்கு அது பரிந்துரை செய்யப்பட்டது. ஆனாலும்கூட, இன்று மாநில அரசின் சார்பிலே வேறு ஒரு திட்டத்தை நாம் கொண்டு வர இருக்கிறோம். இங்கே சென்னையிலே இருந்து செங்கற்பட்டு வரையிலும் ஒரு 'எக்ஸ்பிரஸ் வே'—விரைவு வழிப்பாதை— அயல் நாடுகளில் இருப்பதைப் போல்—இங்கேயும் போடுவதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது. அந்தப் பாதை போடுவதன் மூலமாக இங்கே போக்குவரத்து நெரிசலைத் தடுக்க முடியும். அப்படிப்பட்ட திட்டத்தை நாம் இங்கே செயல் படுத்தினால் அது மற்ற மாநிலங்களுக்கும்கூட வழிகாட்டியாக அமையும். ஆகவே, அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆனூர்பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய தமிழக அரசே அதற்கான முயற்சிகளைச் செய்வதாக அறிவித்தார்கள். அதுபற்றி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மாற்றுப்பாதைக்கு எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிக்கு முன்னதாக நம்முடைய செங்கற்பட்டு நகரைச் சுற்றித் தனியாக பாதை போடும் உத்தேசம் தமிழக அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டம் இல்லை. ஆனாலும் அங்கே ஒரு ரயில்வே கேட் குறுக்கிடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அங்கே ஒரு பெரிய பாலத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற்று அமைக்க வேண்டும். அப்படி அது அமைக்கப்படுகின்ற நேரத்தில் நாம் பாதிச் செலவை ஏற்க வேண்டும். மத்திய அரசு பாதிச் செலவை ஏற்க வேண்டும். அதற்காக ஒப்புதல் கேட்கப்பட்டு, இன்னும் கிடைக்கப் பெறாமல் இருக்கிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டிலே இருக்கும் அந்தக் குறுகிய பாதை சென்னையிலிருந்து தென் மாவட்டங்களுக்கும், தமிழகத்தின் பெரும்பகுதியான இடங்களுக்கும் செல்கிற ஒரே பாதையாக இருக்கிறது. அது மிகக் குறுகலாக இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் முன்பு குறிப்பிட்டது போல் அது பல நேரங்களில் பயணிகளுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கிறது. ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் அங்கே காத்துக் கிடக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, மாற்றுப்பாதை அமைக்க உடனடியாக முடியவில்லை என்றாலும் அந்தப் பாதையை அகலமாக்கி அதன் மூலம் பயணிகளுக்கு வசதியை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அகலமாக்க முடியாத நிலைமை அங்கே இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காரணம், அது ஒரு 'ரிசிடென்சியல் ஏரியா'. அது போகின்ற இடங்களில் எல்லாம் கட்டிடங்கள் பக்கத்தில் இருக்கின்றன. சாலையை அகலமாக்க வேண்டுமானால் கட்டிடங்களை இடித்தால்தான் முடியும், இல்லையென்றால் முடியாது. ஆகவே, மாற்றுப்பாதை அமைக்கும் ஆய்வுகள் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.